# புதுக்கோட்டை நகராட்சி

## புதுக்கோட்டை நகராட்சியில் 30.11.2023 அன்று நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான பொருள்கள்.

### மன்றப்பொருள்கள்

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 1 | நகராட்சி ஆணையாளர் அவர்களது தினசரி நாட்குறிப்பு 2023 அக்டோபர் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:346<br>பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்: 2 | புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு (2023-2024) 02.11.2023 மற்றும் 03.11.2023 ஆய்வு மற்றும் ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளப்பட்டதால் புதுக்கோட்டை நகராட்சிக்கு கூட்ட அரங்கு தொடர்பான வாடகை செலுத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் புதுக்கோட்டை அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி 02.11.2023 மற்றும் 03.11.2023 சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு ஆய்வுக்கூட்டம் இந்நகரில் நடைபெற்றது. அதற்கான கூட்ட அரங்கு தொடர்பான வாடகை ரூ.26,000/-ஐ வழங்க கோரி திரு.கே.அம்புரோஸ் மலரகம், புதுக்கோட்டை நிறுவனத்தினரால் தொகைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே திரு.கே. ஆம்புரோஸ் மலரகம் புதுக்கோட்டை நிறுவனத்திற்கு தொகை ரூ.26,000/- வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:10345/2023/இ2). | தீர்மான எண்: 347<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 3 | இந்நகராட்சி சத்தியமூர்த்தி டேங்க் காந்தி பூங்கா அருகில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு (Gem Rate ) இணையத்தள வசதிகளுடன் கூடிய கணிப்பொறி விநியோகம் மற்றும் ஒருங்கிணைந்த செயல்புரிதல் பலகை (Inter Active Pannel ) அமைத்து கொடுப்பதற்கான விலைப்புள்ளிகள் 04.10.2023 அன்று Core 17 Desktop with monitor Core 17, 16GBS SSD, Key board mouse 22” LED Monitor with 11 6 Nos 3year warranty for first floor விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br>1. Spyder Technology Salem Rs.5,63,284/-<br>2. Raj Computers, Salem Rs.5,70,000/-<br>3. Venus Tech, Salem Rs.5,79,500/-<br>மேற்படி மூன்று விலைப்பட்டியலில் குறைவான விலைவிகித்தில் விநியோகம் செய்ய கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிதாரர் Spyder Technology Salem Rs.5,63,284/-க்கு கொடுத்துள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம், அனுமதிக்கலாம். மேலும் செலவினம் கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். | தீர்மான எண்: 348<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். | |
| பொருள் எண்: 4 | இந்நகராட்சி சத்தியமூர்த்தி டேங்க் காந்தி பூங்கா அருகில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு (Gem Rate ) இணையத்தள வசதிகளுடன் கூடிய கணிப்பொறி விநியோகம் மற்றும் ஒருங்கிணைந்த செயல்புரிதல் பலகை (Inter Active Pannel ) அமைத்து கொடுப்பதற்கான விலைப்புள்ளிகள் 04.10.2023 அன்று Smart 75 Interactive board with touch panel No.1, Core 17 Desktop with monitor core 17, 16GB SSD, Key Board mouse 22" LED, Monitor, Win 11 5 Nos, 3 Year Warranty for gound floor விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br>1. Spyder Technology Salem Rs.6,51,904/-<br>2. Raj Computers, Salem Rs.6,65,000/-<br>3. Venus Tech, Salem Rs.6,82,500/-<br>மேற்படி மூன்று விலைப்பட்டியலில் குறைவான விலைவிகிதத்தில் விநியோகம் செய்ய கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிதாரர் Spyder Technology Salem Rs.6,51,904/-க்கு கொடுத்துள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம், அனுமதிக்கலாம். மேலும் செலவினம் கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். | தீர்மான எண்: 349<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 5 | புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆலங்குடி ரோடு, தடிகொண்ட அய்யனார் திடல் Block No.70, TS.No.15/2 (5347/2) இடத்தில் Dheen Entertainment திரு.அலாவுதீன் அவர்கள் 2023 டிசம்பர் மாதம் 22ம் தேதி முதல் 2024 ஜனவரி 28ம் தேதி வரை இராட்டினங்களுடன் கூடிய வீட்டு உபயோக பொருட்காட்சி நடத்துவதற்காக 37500 சதுரடி (3484ச.மீ) பரப்பு இடத்தை பயன்படுத்திக்கொள்ளவும் ஒருவார காலத்திற்கு முன்னர் பொருட்காட்சி வேலைகளை தொடங்கவும், ஓரிரு நாட்களில் இடத்தை சுத்தம் செய்து ஒப்படைப்போம் என்றும், நகராட்சிக்கு தேவையான பொழுது உடன் இடத்தை காலி செய்து கொடுத்து விடுவதாகவும் கூறி இடத்திற்கு தடையில்லா சான்று கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். அரசின் அனுமதி சான்ற மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்ற பின்னரே பொருட்காட்சி நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனவே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 35/2023 திருத்தப்பட்டவாறு பிரிவு 109ன்படி) பொருட்காட்சி நடத்த இடத்திற்கான கட்டணம், பொருட்காட்சி, கடைகள் மற்றும் கழிப்பிடம் மற்றும் இதர கட்டணம் ரூ.1,15,000/- வைப்புத்தொகை ரூ.10,000/- மற்றும் இடத்திற்கான கட்டணம் PPR Act ரூ.75,000/- இவைகளை செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கம் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:எப்1/9819/2023) | தீர்மான எண்: 350<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 6 | இந்நகராட்சியில் உள்ள ஜெராக்ஸ் மிசின் பழுதடைந்து இயங்காத சூழ்நிலையில் இருப்பதால் அடிக்கடி ஜெராக்ஸ் எடுக்க வேண்டியிருப்பதால் அவசரம் அவசியம் கருதி ஜெராக்ஸ் மிசினை பழுது நீக்கம் செய்ய ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:3875/2023/சி3) | தீர்மான எண்: 351<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 7 | இந்நகராட்சியில் உள்ள வரி வசூல் மற்றும் அனைத்து பிரிவில் உள்ள கணினிகளும் 10 கே.வி.ஏ பேட்டரிகள் மூலம் இயங்கி வருகிறது. இந்த 10 கே.வி.ஏ.பேட்டரிகள் பழுதடைந்து உள்ளதால் வரிவசூல் மற்றும் அனைத்து பிரிவு கணினிகளும் இயங்காத சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் வரிவசூல் பணி துரிதமாக நடைபெற்று வருவதாலும் அவசரம் அவசியம் கருதி உடனடியாக 10KVA உரிய 20 பேட்டரிகளும் வாங்க Buy Back முறையில் DGS விலைவிகிதத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s Numeric Power System Ltd மூலம் வழங்க உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:3875/2023/சி3). | தீர்மான எண்: 352<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 8 | புதுக்கோட்டை நகராட்சியில் தமிழ்நாடு தேசீய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயங்கி வரும் வீடற்றவர்கள் தங்கும் நம்ம இல்லம் (SUH) 2018-2019ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. சந்தைப்பேட்டை சாலையில் உள்ள 39 படுக்கை கொண்ட இந்த இல்லத்தை பராமரித்து மேற்பார்வை செய்து வருவதற்கு அரசு சாரா நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலகத்தில் விளம்பரம் செய்வதற்கு 11.10.2023ல் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்று 14.10.2023 தமிழ்சுடர் பத்திரிக்கை நாளிதழில் விளம்பரம் வெளியானதில் ஒரே ஒரு அரசு சாரா தொண்டு நிறுவனமான நேசக்கரம் முதியோர் இல்லம் மட்டும் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் வரப்பெற்ற மேற்கண்ட நிறுவனத்திற்கு வீடற்றவர்கள் தங்கும் நம்ம இல்லத்தை பராமரிப்பு செய்து மேற்பார்வை செய்து வருவதற்கு ஒரு நபருக்கு ரூ.1000/- வீதம் 50 நபர்களுக்கு ஓராண்டு செலவினத்தொகை ரூ.6,00,000/- SUH தலைப்பின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மேற்கண்ட இல்லத்தை பராமரிப்பு செய்து மேற்பார்வை செய்வதற்கு ஒரு நபருக்கு ரூ.1000/- வீதம் 50 நபர்களுக்கு ஓராண்டு செலவினத்தொகை ரூ.6,00,000/- O & M தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் இத்தொகையினை SUH தலைப்பின் கீழ் எடுத்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கலாம். (ந.க.எண்:15993/2014/எப்1). | தீர்மான எண்: 353<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 9 | புதுக்கோட்டை நகராட்சியில் தமிழ்நாடு தேசீய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயங்கி வரும் வீடற்றவர்கள் தங்கும் நம்ம இல்லம் ((SUH) 2018-2019ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த இல்லத்தை பராமரித்து மேற்பார்வை செய்து வருவதற்கு புதுக்கோட்டை மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலகத்தில் மாவட்ட அளவில் மிகக் குறைந்த அளவில் அரசு நிர்ணயித்த தொகை ரூ.12,000/- மற்றும் CGST 2.5 % மற்றும் SGST 2.5% சேர்த்து ரூ.600/- ஆக மொத்தம் ரூ.12,600/- (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து அறநூற்று மட்டும் ) தமிழ்சுடர் விளம்பர செய்தி கொடுத்ததற்கு (Day – NULM SUH ) தலைப்பின் கீழ் எடுதம்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (15993/2014/எப்1) | தீர்மான எண்: 354<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்: 10**

புதுக்கோட்டை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் தீர்மான எண்:48 நாள்:28.04.2023ன் அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 11.08.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1) | வார்டு எண்:29 காமராஜபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் சுற்றுச்சுவர் தாழ்வாக உள்ளதால் அதனை உயர்த்தியும் சேதமடைந்ததை பூசியும் சரிசெய்யவும் பணி மேற்கொள்ளுதல். | **4.90** | SMJR Transport & Construction Pudukkottai | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு |
| | | | திரு.எஸ்.சுப்பிரமணியன் புதுக்கோட்டை | மதிப்பீட்டை விட 0.29 % அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், SMJR Transport and Construction புதுக்கோட்டை ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **0.09%** குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 786/2023/இ1)**

**தீர்மான எண்: 355**
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 11**

புதுக்கோட்டை நகராட்சி புதுக்கோட்டை மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள தேர்வு நிலை நகராட்சி ஆகும். புதுக்கோட்டை நகரம் தமிழகத்தில் ஒரே சமஸ்தானமாக விளங்கிய நகராமாகும். வரலாற்று சிறப்பு மிக்க புதுக்கோட்டை சமஸ்தானம் எந்தவித நிபந்தனையும் விதிக்கப்படாமல் கருவூலத்துடன் இந்திய பேரரசின் புதுக்கோட்டை ஆண்ட மன்னர்களால் இணைக்கப்பட்டது.

இதனுடைய வரலாற்று சிறப்பு மற்றும் பெருமைகளை வெளிக்கொணரும் வகையில் நூற்றாண்டு விழா கண்ட ( 1912-2012 ) புதுக்கோட்டை நகராட்சியை மாநாகராட்சியாக தரம் உயர்த்த வேண்டி கீழ் கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. புதுக்கோட்டை நகராட்சி 1912-ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு படிப்படியாக தரம் உயர்ந்து 22.03.1988 ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது.
2. 2010-ஆம் ஆண்டு வரை 12.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 1,18,173 மக்கள் தொகை ஆக இருந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு ஆணை எண்.12 நாள்.6.01.2011ன்படி புதுக்கோட்டை ஊராட்சி பகுதிகள் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைக்கப்பட்டு தற்போது 21.95

**தீர்மான எண்: 356**
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி 143748 நபர்கள் வசிக்கும் நகரமாகவும் 42 வார்டுகளை கொண்டதாகவும் உள்ளது.

3. அரசாணை (M.S) எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.9.08.2010 ன்பட ரூ.10.00 கோடிக்கு மேல் வருமானம் உள்ள நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் புதுக்கோட்டை நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.499 நாள்.26.02.2014ன்படி அனுமதிக்கப்பட்டு அரசுக்கு11.04.2014ல் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

4. புதுக்கோட்டை நகராட்சி தற்போது 2023ம் ஆண்டு மக்கள் தொகை 1,68,900 ஆகும். தற்போது நகராட்சியின் ஆண்டு வருமானம் கேட்பு பட்டியல்படி ரூ.15.08 கோடி ஆக உள்ளது. இதர வருவாய் சேர்த்து 2019-2020ம் ஆண்டு கணக்கீட்டின்படி ஆண்டு வருமானம் ரூ.37.99 கோடி மற்றும் ஆண்டு செலவினம் ரூ.29.08 கோடி 2020-2021ம் ரூ.46.81 கோடியாகவும், 2021-2022ம் ஆண்டு ரூ.34.1 கோடியாகவும், 2022-2023ம் ஆண்டு ரூ.61.38 கோடியாகவும் உள்ளது. நகர் பகுதிகளில் 3730 குடியிருப்புகள் உள்ளது.

5. புதுக்கோட்டை நகராட்சிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் 11.எம்.எல்.டி. குடிநீர் மற்றும் உள்ளூர் குடிநீர் திட்டமான அம்மையாப்பட்டி நீரேற்று நிலையம் மூலம் 1 எம்.எல்.டி. மற்றும் நகர பகுதிகளில் உள்ள அடிபம்பு, சிறுமின்விசை பம்பு , பவர் பம்பு ஆகியவற்றின் மூலம் 2.15 எம்.எல்.டி பெறப்பட்டு ஆக மொத்தம் 14.15 எம்.எல்.டி. குடிநீரில் 70 எல்.பி.சி.டி. என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது. காவேரி கூட்டு குடிநீர்திட்டம் 30 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் பழைய பிரதான குழாய்கள் மற்றும் மினி மோட்டர் புதுப்பிக்கவும் நகர பகுதியில் தரைமட்ட தண்ணீர் சேகரிப்பு தொட்டி கட்டிடம் மதிப்பீடு ரூ.75.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துறையால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் உள்ளூர் குடிநீர் ஆதாரமாக உள்ள தலைமை நீரேற்று நிலையம் அமையாப்பட்டி வெள்ளாற்றிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு 5 வார்டுகளுக்கு (38,39,40,41,42) 24X7 அடிப்படையில் குடிநீர் வழங்கும் பொருட்டு அம்ரூட் 2.O திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.23.59 கோடிக்கு திட்ட பிரேரனை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

6. புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளில் 37 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம்

பயன்பாட்டில் உள்ளது. இதுவரை 14,428 கழிவு நீர்க்குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

7. புதுக்கோட்டை நகராட்சியில் 180.179 கி.மீ. நீளமுள்ள சாலை வசதிகள்,

* 42 வார்டுகளிலும் 7973 எல்.இ.டி. பல்புகள் கொண்ட தெருவிளக்கு வசதிகள்
* கழிவுநீர் வடிகால் வசதிகள்,
* 114 பூங்காக்கள் உள்ளன 22 பூங்காக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
* 75 குளங்களுக்கும் நீரின் அமைப்பு வழிதடம் ஒன்றுடன் ஒன்று இணைந்த மழைநீ வாய்க்கால்களும் உள்ளது.
* "A" Grade கொண்ட புதிய பேருந்து நிலையமும் உள்ளது, இப்பேருந்து நிலையம் கட்டப்பட்டு 4 ஆண்டுகள் கடந்த நிலையில் ஆங்காங்கே பழுதடைந்துள்ள NIT, நிபுணர்களால் ஆய்வுசெய்யப்பட்டு புதிதாக பேருந்து நிலையம் அவ்விடத்திலேயே கட்டுவதற்கு மதிப்பீடு ரு.18.95 கோடிக்கு கலைஞ நகப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டு 24.11.23 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
* 10.62 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. இந்நகராட்சியில் விடுப்பட்ட 5 வார்டுகள் மற்றும் விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணிக்கு அம்ரூட் 2.O திட்டத்தில் மதிப்பீடு ரூ.70.00 கோடியும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் புதிதாக அமைக்கவும் மதிப்பீடு ரூ.19.95 கோடியும் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.
* நகர் பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 70 மெட்ரிக் டன் குப்பைகள் 100% Door to Door Collectio மூலம் சேகரிக்கப்பட்டு 90% மக்கும் குப்பை மக்காத குப்பைகள் என பிரித்து வழங்கக்கூடிய அமைப்புகள் , குப்பைகளை உரமாக்க நகர் பகுதிகளில் 6 இடங்களில் நுன்ணிய உரமாக்கும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கக கரித்தூல் தயாரிக்கும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.
* 13.13 ஏக்கர் பரப்பளவு கொண்ட உரக்கிடங்கில் பயோ மைனிங் முறையில் 60,000 க.மீ அளவு குப்பைகளை பிரித்து எடுத்து சுத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.
* அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பொருட்டு இணைப்புகளுக்கான கட்டணங்களை 10 தவணையில் செலுத்தும் முறையில் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

8. புதுக்கோட்டை நகராட்சி நிலவியல் குறுக்கு கோடு 78-79 ல் அடங்கியுள்ளது. கடல்

| | | |
|---|---|---|
| | மட்டத்திற்கு மேல் 87.28 மீட்டர் உயரத்தில் உள்ளது.<br>9. தமிழ்நாட்டில் 2-வது பெரிய மியூசியம் புதுக்கோட்டை நகரத்தில் அமைந்துள்ளது. நகர் சுற்று பகுதிகளில் 45. கி.மீ. தொலைவில் திருச்சி மாநகரமும், 48 கி.மீ. தொலைவில் தஞ்சாவூர் மாநகரமும், 48 கி.மீ. தொலைவில் காரைக்குடி, 35 கி.மீ. தொலைவில் அறந்தாங்கி ,20 கி.மீ. தொலைவில் சித்தன்னவாசல் , குடுமியான்மலை, திருமயம் கோட்டை ஆகியவை உள்ளது. புதுக்கோட்டை நகராட்சியை ஒட்டி திருச்சி - இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை ( NHAI ) உள்ளது.<br>புதுக்கோட்டை நகராட்சி பழமை பொருந்திய பெருமைவாய்ந்த நகராட்சி ஆகும். புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்திட புதுக்கோட்டை நகராட்சியை ஒட்டியுள்ள பகுதிகளான<br>1. வாகவாசல் பஞ்சாயத்து<br>2. முள்ளூர் பஞ்சாயத்து<br>3. திருக்கட்டளை பஞ்சாயத்து<br>4. திருமலைராய சமுத்திரம்<br>5. கவிநாடு கிழக்கு<br>6. கவிநாடு மேற்கு<br>7. 9 பி நத்தம் பண்ணை பஞ்சாயத்து<br>8. 9 ஏ நத்தம் பண்ணை பஞ்சாயத்து.<br>9. தேக்காட்டுர் ஊராட்சியில் உள்ள வார்டு எண்.1,2,3 மேல தேமுத்துப்பட்டி, கீழதேமுத்துப்பட்டி மழுக்கன்பட்டி, சிவபுரம், பகுதிகள் மட்டும்<br>10. திருவேங்கை வாசல் சிப்காட் தொழிற்பேட்டை பகுதி வார்டுகள் 3 மற்றும் 4 மட்டும்<br>11. வெள்ளனுார் சிப்காட் தொழிற்பேட்டை மற்றும் பகுதிகள் வார்டுகள் 7,8,9 ஆகியவை கப்சா காடுகள் மேற்கு பகுதி (Forest) (G.O.Ms.No.3 Environment & Forest (FR-14), 6th January 2010)<br>இந்த 8 கிராம பஞ்சாயத்துகள் முழுமையாகவும் 3 கிராம பஞ்சாயத்துகள் பகுதிகளாக புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும்பட்சத்தில் சுமார் 70 வார்டுகள் , மக்கள் தொகை 2,16,445 ஆகவும் 121.26 சதுர கீலோ மீட்டர் பரப்பளவை கொண்டதாகும்.<br>மேற்கண்ட பஞ்சாயத்துகளை புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்தால் அரசிடமிருந்து | |

| | | |
|---|---|---|
| | கூடுதலாக நகர்புர வளர்ச்சிக்கு தேவையான கூடுதல் நிதியினை பெற்று அப்பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் தரமான முறையில் போதுமான அளவு ஏற்படுத்தித் தர ஏதுவாக இருக்கும் என்பதால் தற்போதைய புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தலாம்.<br><br>மேற்கண்ட பஞ்சாயத்து பகுதிகளில் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டப்பட்டு நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் உள்ளது. மேலும், முள்ளூர் பஞ்சாயத்து பகுதியில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைந்துள்ளது. அதனை ஒட்டி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் துணைகோல் நகரம் முள்ளூர் பஞ்சாயத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் ரூ.56.31 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு பிளாட்டுகள் மற்றும் அடிப்படை வசதி கட்டுப்மானப்பணிகள் நடைபெற்று வருகிறது. 9 நத்தம் பண்ணை பஞ்சாயத்தில் தமிழக அரசின் ஐ.டி.ஐ மற்றும் சிப்காட் அமைந்துள்ளது. வெள்ளனூர் மற்றும் திருவேங்கை வாசல் பஞ்சாயத்துகளின் சிப்காட் தொழிற்பேட்டை பகுதி மற்றும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளது<br><br>மேற்கண்ட 8 கிராம பஞ்சாயத்துகள் முழுமையாகவும் 3 கிராம பஞ்சாயத்துகள் பகுதிகளாக நகராட்சியுடன் இணைப்பதால் நகராட்சியின் பரப்பளவு 121.26 சதுர கிலோ மீட்டரும் ஆண்டு வருவாய் சுமார் ரூ.64.21 கோடியாகவும் உயரும்.<br><br>மாநகராட்சியாக தரம் உயர்த்துதல் தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தச்சட்டம் 35/2022) பிரிவு 3(C)ன்படி வழிமுறைகளில் ரூ.30.00 கோடி வருவாய்க்கு மேல் உள்ள நகராட்சிகள் அரசு கொள்கை முடிவின் அடிப்படையில் பரப்பளவு, மக்கள் தொகை, வருவாய் ஆகியவற்றை கணக்கில் கொண்டு மேற்கொண்ட நடைமுறைகளை பின்பற்றி மாநகராட்சிகளை உருவாக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் , மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 2021ம் வருட சட்டமன்ற தேர்தல் அறிக்கையிலும் புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே, புதுக்கோட்டை நகராட்சியை மேற்படி பஞ்சாயத்துகளை இணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியாக தரம் உயர்த்திட 8 கிராம பஞ்சாயத்துகள் முழுமையாகவும் 3 (திருவேங்கைவாசல் வார்டு எண்.3 மற்றும் 4), (வெள்ளனூர் வார்டு எண்.7, 8 மற்றும் 9) பஞ்சாயத்துகளின் இசைவு பெற்று மாநாகராட்சியாக தரம் உயர்த்தி வழங்கிடவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் வழியாக தமிழக அரசை கேட்டுக்கொள்ள உரிய பிரேரனை அனுப்பிவைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (C1/3738/2014) | |
| பொருள் எண்: 12 | இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், இந்நகராட்சி பகுதிகளில் உற்பத்தியாகும் மக்கும் குப்பைகளை கொண்டு நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் ( MCC ) உரம் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவருகிறது. தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்கள் இந்த நுண்ணுயிர் உரத்திற்கு “ **செழிப்பு** “ என பெயரிட்டு, வேளாண்துறையின் தரச்சான்று பெற்று பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் 5 கிலோ எடையில் பைகளில் தயார் செய்து வழங்கிட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இந்நகராட்சியின் பெயரிட்டு **செழிப்பு உரம்** என அச்சிட்டு 5 கிலோ கொள்ளவு உள்ள 2000 எண்ணிக்கை பைகள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் **ரூ.1,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.(Roc.No.10750/2023/H2) | தீர்மான எண்: 357<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 13 | இந்நகராட்சி பொது சுகாதார உபயோகத்திற்கு தேவையான நிலவேம்பு பவுடர் கையிருப்பு ஏதும் இல்லை. தற்போது பருவமழை பெய்து வருவதால், நகராட்சி பகுதியில் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுவருகிறது. மேலும் பொது சுகாதாரதுறை இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரைப்படி உள்ளாட்சி அமைப்புகள் போதுமான அளவு நிலவேம்பு பவுடர் கையிருப்பு வைத்துக்கொள்ள கூறியுள்ளார்கள் அதன்படி நிலவேம்பு பவுடர் 200 கிலோ வாங்க ஆகும் உத்தேச செலவினம் **ரூ.3,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.(Roc.No.10748/2023/H2) | தீர்மான எண்: 358<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 14 | இந்நகராட்சி பொது சுகாதார உபயோகத்திற்கு தேவையான தளவாட சாமான்கள் பற்றாக்குறையாக உள்ளதால் தூய்மை பணி செய்வது சிரமமாக உள்ளது. மேலும் தற்போது பருவமழை பெய்து வருவதால், சில இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் அதனை அப்புறப்படுத்த தளவாட சாமான்கள் இல்லை ஆகையால் மேற்படி சாமான்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் **ரூ.7,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.(Roc.No.10749/2023/H2) | தீர்மான எண்: 359<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 15 | இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி 70MT அளவுக்கு குப்பைகள் உருவாகிறது. அதில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும், மறு சுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் தினசரி சுமார் 10 MT அளவுக்கு சேகரிக்கப்படுகிறது. இதனை இறுதியாக்கம் செய்ய அரியலூரில் உள்ள சிமெண்ட் ஆலைகளுக்கு ஊடு எரிபொருளாக ஏற்றி அனுப்பிவைக்கப்படுகிறது.<br>இந்நகராட்சி பொதுசுகாதார வாகனங்கள் மூலம் குறைவான அளவு எடைமட்டுமே ஏற்றமுடிகிறது. ஆகையால் உள்ளுர் டாரஸ் வாடகை வாகனங்கள் மூலம் ஏற்றி அனுப்ப ஆகும் உத்தேச செலவினம் **ரூ.3,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.(Roc.No.10747/2023/H2) | தீர்மான எண்: 360<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 16 | இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் U15 மினி கிட்டாச் வண்டி வார்டு பகுதிகளில் வடிகால் மண் அப்புறப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாகனத்தை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாற்றம் செய்ய வாகனத்தை ஏற்றி, இறக்க சறுக்கு தளம் ( **RAMP** ) இல்லை, இதனால் இவ்வாகனத்தை இயக்க சிரமமாக உள்ளது. புதியதாக சறுக்கு தளம் ( **RAMP** ) இரும்பினால் செய்திட ஆகும் உத்தேச செலவினம் **ரூ.30,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.(Roc.No.10746/2023/H2) | தீர்மான எண்: 361<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 17 | இந்நகராட்சிக்கு சொந்தமான சத்தியமூர்த்தி வணிக வளாகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலக கட்டிடத்தினை மராமத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.40,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இப்பணியை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.ஆர். விஜயகுமார் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளலாம் (ந.க.எண்: 267/2023/இ1) | தீர்மான எண்: 362<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.<br>. |
| பொருள் எண்: 18 | இந்நகராட்சி வார்டு எண். 35, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிக்கப்படுவதற்கு மோட்டாரின் உதிரிபாகங்கள் மற்றும் மின் பொருள்களின் மின் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண். இ1/10722/2023) | தீர்மான எண்: 363<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 19 | இந்நகராட்சி வார்டு எண். 31, போஸ் நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதிகளுக்கு தெருவிளக்குகள் அமைக்க மின்சார வாரியம் இணைப்பு பெறுவதற்கு வயரிங், மீட்டர் பாக்ஸ், மெயின் பாக்ஸ் பொருத்தும் வகையில் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் SMJR Construction and Transpsort அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10723/2023) | தீர்மான எண்: 364<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 20 | இந்நகராட்சி வார்டு எண். 25, சத்தியமூர்த்தி சாலையில் பேருந்துநிலையம் அருகில் உள்ள தெரு மின்விளக்கு சுவிட்சு போர்டு மற்றும் கேபிள் பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றியமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை 15வது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தில் மேற்கொள்ளலாம். (ந.க.எண். இ1/10724/2023) | தீர்மான எண்: 365<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 21 | இந்நகராட்சி வார்டு எண். 25, DDபிளான் சாலையிலும், வார்டு எண். 36, திருமயம் சாலையிலும் தெரு மின்விளக்குகள் அமைத்திட வயரிங் மற்றும் சுவிட்சு போர்டு அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை 15வது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தில் மேற்கொள்ளலாம். (ந.க.எண். இ1/10725/2023) | தீர்மான எண்: 366<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 22 | இந்நகராட்சி வார்டு எண். 01, சமத்துவபுரம் பிரதான சாலை மற்றும் ஆர்ச் அருகில் உள்ள மின்விசை பம்புகள் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. இந்த இரண்டு மின்விசை பம்புகளையும், புதிய மின் மோட்டார்கள் இறக்கி பழுது நீக்கி மக்கள் பயன்டுத்தும் வகையில் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,70,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண். இ1/10726/2023) | தீர்மான எண்: 367<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 23 | இந்நகராட்சி வார்டு எண். 41, சின்னப்பா நகர், மல்லிகை நகர்,உய்யக்கொண்டான் கரை மற்றும் சக்கரவர்த்தி நகர் பகுதிகளிலுள்ள பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளது. அதற்கு புதிதாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர். முருகேசன் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10727/2023) | தீர்மான எண்: 368<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 24 | இந்நகராட்சி வார்டு எண். 40, 41, மல்லிகை நகர், குறிஞ்சி நகர், சின்னப்பா நகர், சக்கரவர்த்தி நகர், பொன் நகர், EVR நகர் பகுதிகளிலுள்ள பகிர்மான குழாய் கேட் வால்வுகள் பழுதடைந்துள்ளது. புதிதாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர். முருகேசன் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10728/2023) | தீர்மான எண்: 369<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 25 | இந்நகராட்சியில் பள்ளி கட்டிடங்கள் பழுதடைந்த கட்டிட வகுப்பறைகள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள வகுப்பறைகளை இடிப்பதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. காமராஜபுரம் ஆரம்பப்பள்ளி<br>2. இராஜகோபாலபுரம் உயர்நிலைப்பள்ளி<br>3. சாந்தநாதபுரம் ஆரம்பப்பள்ளி<br>4. தர்மராஜாபிள்ளை ஆரம்பப்பள்ளி<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை பொது ஏலம் விட்டு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10731/2023) | தீர்மான எண்: 370<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 26 | இந்நகராட்சியில் வார்டு எண். 30, காமராஜபுரம் பகுதிகளில் உள்ள சிறுமின்விசை கை பம்பு 5 எண்ணிக்கையில் பழுதடைந்து உள்ளது. பழுதுநீக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற உளப்பினர் கோரிக்கையின்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்: 371<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10732/2023) | |
| பொருள் எண்: 27 | இந்நகராட்சியில் வார்டு எண். 40, சின்னப்பா நகர் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டியில் இருந்து நீர் ஏற்றம் செய்யும் நீர் மூழ்கி மோட்டார் ( 7 ½ HP) பழுதடைந்து உள்ளது. எனவே, பிரித்து காயில் கட்டவும், உதிரி பாகங்கள் மாற்றவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர். முருகேசன் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10733/2023) | தீர்மான எண்: 372<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 28 | இந்நகராட்சியில் வார்டு எண். 12, காமராஜபுரம் 32 மற்றும் 33ம் வீதியில் பகிர்மான குழாய் ஒன்பது இடங்களில் பழுது நீக்கம் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ரூ. 40,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர். முருகேசன் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10735/2023) | தீர்மான எண்: 373<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 29 | **பொருள் எண்: 29**<br>இந்நகராட்சியில் வார்டு எண். 10, வண்டிப்பேட்டை, குழந்தை முத்துமாரியம்மன் கோவில் எதிரில் பகிர்மான குழாய் பழுது நீக்கம் பணி மற்றும் கேட் வால்வு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ரூ. 36,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர். முருகேசன் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10736/2023) | தீர்மான எண்: 374<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 30 | இந்நகராட்சி வார்டு எண். 35, 36, 37, பூங்கா நகர், மெயின் சாலை, மருப்பிணி ரோடு, புல்பண்ணை வரை உள்ள தார் தளம் பேட்ச் அமைக்கும் மணிக்கு , பணி மேற்கொள்ள நுகர்வோர் பாதுகாப்பு குழு மற்றும் போக்கவரத்து பாதுகாப்ப குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ரூ. 2,75,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10738/2023) | தீர்மான எண்: 375 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 31 | இந்நகராட்சி வார்டு எண். 20 மேலமேட்டுத்தெரு சிறுமின்விசை பம்பு டேங்கில் இருந்து குழாய் நீட்டிப்பு செய்து திருகு குழாய் அமைக்க குடிசை வாழ் மக்களுக்கு நகர்மன்ற உறுப்பினர் வேண்டுதலின்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ரூ. 38,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. பி.நாகராஜன் அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10739/2023) | தீர்மான எண்: 376 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 32 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை அவர்களது கடிதத்தின்படி, நடப்போம் நலம் பெறுவோம், இத்திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக வரப்பெற்ற கடிதத்தின்படி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ள 8கி.மீ நடைபாதையில் ஒவ்வொரு 1 கி.மீட்டருக்கும் களைப்பாருவதற்கு உட்காரும் கருங்கல் Bench கள் அமைத்திட தெரிவித்ததின்படி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 2,40,000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண். இ1/10737/2023) | தீர்மான எண்: 377 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 33 | புதுக்கோட்டை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் தீர்மான எண்:108 நாள்:27.06.2023 அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 10.10.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்: 378 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விபரம்</td><td>மதிப்பீடு ரூ. லட்சத்தில்</td><td>ஒப்பந்ததார் பெயர் திருவாளர்கள்</td><td>ஒப்பந்தப்புள்ளி விகிதம்.</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண்: 1 சிவாஜி நகர், விவேகானந்தா நகர், மற்றும் நரிமேடு பகுதியில் விடுபட்ட பகுதிகளுக்கு காவேரி குடிநீர் பைப்லையன் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">2.00</td><td>எம்.கரண் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டைவிட 0.27 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>பி.சுரேஸ்குமார் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 3.87 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.கரண், புதுக்கோட்டை ஒப்பந்ததார் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட 0.27 சதவீதம் குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:5912/2023/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்: 34</td>
<td>
புதுக்கோட்டை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டு பொது நிதியின் கீழ் தீர்மான எண்:111 நாள்:27.06.2023 அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 03.11.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விபரம்</td><td>மதிப்பீடு ரூ. லட்சத்தில்</td><td>ஒப்பந்ததார் பெயர் திருவாளர்கள்</td><td>ஒப்பந்தப்புள்ளி விகிதம்.</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண்: 34 சிராஜுதீன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">5.00</td><td>வி.செல்வக்குமார் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டைவிட 0.03 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>கே. பரமசிவம் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.33 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வி.செல்வக்குமார், புதுக்கோட்டை ஒப்பந்ததார் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட 0.03 சதவீதம் குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:5914/2023/இ1)
</td>
<td>தீர்மான எண்: 379<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்: 35</td>
<td>இந்நகராட்சி பாதாள சாக்கடை சுத்தகரிப்பு நிலையத்தில் (OCEMS ) ஆன்லைன் மானிட்டரிங் சிஸ்டம் பொருத்தம் செய்திட தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இப்பணிக்கு CGF திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.48,00,000/-க்கு பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் பழைய பம்பிங் குழாயினை 700 எம்.எம்.dia மற்றும் 300mm dia CI பைப்புகளிலும் Outlet pipe ஆன 400 mm dia லும் flow meter பொருத்தம் செய்ய வழிவகை செய்யப்படவில்லை. மேற்கண்ட பணியினை RLI Technology சென்னை அவர்கள் மேற்கொள்ளப்படும் நிலையில் மேற்படி Flow Meters மட்டும் சப்ளை செய்துள்ளார்கள்.<br>இம்மூன்று Flow மீட்டர்களை பொருத்தம செய்ய தற்போது நடைமுறையில் உள்ள கழிவுநீர் நீரேற்றத்தினை</td>
<td>தீர்மான எண்: 380<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>ஒருவார காலத்திற்கு நிறுத்தப்பட்டு மாற்று வழிவகை செய்யப்படவும், ஏற்கனவே உள்ள CI பம்பிங் மற்றும் Outlet குழாய்களை மாற்றம் செய்யவ் அதற்கான அளவுகள் மாற்றி தயார் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.<br>இப்பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது தார்சாலை துண்டிப்பு மற்றும் மழைநீர் வடிகால் துண்டிப்பு, பேவர் பிளாக் நடைபாதை துண்டிப்பு செய்வது அவசியமாகிறது.<br>மேற்கண்ட பணிகளில் கீழ்கண்ட<br>1. கழிவநீர் மற்றும் டீசல் எஞ்சின் 35 HP மூலம் மாற்றம் செய்தல் ரூ.3,20,000/-<br>2. பழைய CI குழாய்களை துண்டிப்பு செய்து மாற்றி அமைத்து மீட்டர் பொருத்துதல் மற்றும் வயரிங் தொட்டி கட்டுதல் ரூ.7,00,000/-<br>3. தார் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் செப்பணிடுதல் ரூ.3,50,000/-<br>ஆக கூடுதல் ரூ.13,70,000/-<br>மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்: 36</td><td>புதுக்கோட்டை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் தீர்மான எண்:282 நாள்:31.10.2023 அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 26.10.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ. லட்சத்தில்</th><th>ஒப்பந்ததார் பெயர் திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்.</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சி வார்டு எண்: 20 திருவப்பூர் சௌராஸ்டிரா கீழத்தெருவில் புதிதாக ஆழ்துளைகிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு அமைத்தல்</td><td rowspan="2">2.50</td><td>எம். கரண் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டைவிட 0.08 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>பி.சுரேஷ்குமார் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 1.57 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம். கரண், புதுக்கோட்டை ஒப்பந்ததார் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:9489/2023/இ1)</td><td>தீர்மான எண்: 381<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்: 37</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் தீர்மான எண்:72 நாள்:27.06.2023 அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 26.10.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ. லட்சத்தில்</th><th>ஒப்பந்ததார் பெயர் திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்.</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண்: 09 மாப்பிள்ளையார் குளம் சாலையில் மினிபவர் பம்ப் மாற்றி அமைத்து பைப் லைன் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">1.50</td><td>ஆர். மணிகண்டன் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டைவிட 0.15 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>கே. நெப்போலியன் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 4.71 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர். மணிகண்டன், புதுக்கோட்டை ஒப்பந்ததார் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:3182/2023/இ1)</td>
<td>தீர்மான எண்: 382 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

**ஒம்/. செ . திலகவதி, பி.காம்.,**
**நகர்மன்றத் தலைவர்,**
**நகர்மன்றம், புதுக்கோட்டை**

/உண்மை நகல்/

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி.